பொன் வித்யாஷ்ரம் குழுமப் பள்ளிகள்

**வகுப்பு - V**

**செப்டம்பர்  மாத பாடக்குறிப்புகள்**

**பாடப்பகுதிகள்**

1. செய்யுள் - திருக்குறள்.
2. உரைநடை- தமிழர்களின் வீரக்கலைகள்
3, துணைப்பாடம் - கங்கை கொண்ட சோழபுரம்.
4. இலக்கணம் - இணைப்புச் -சொற்கள்.

1. திருக்குறள்.

வினா- விடை : (புத்தகப் பயிற்சிகளும்)

1. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை?

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்திருத்தல். ஆகிய இவ்விரண்டும் புண்பு உடையவராக வாழ்வதற்கு உரிய நல்ல வழியாகும்.

2.'மரம் போன்றவர்' எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது ?

அரத்தைப் போல் கூர்மையான அறிவு உடையவரானாலும் மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், மரத்தைப் போன்றவரே ஆவர்.

3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனிலாது போகும் ?

பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வ -மானது, தூய்மையற்ற பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவது போன்றதாகும்.

**உரைநடை - தமிழர்களின் வீரக்கலைகள்**

**வினா- விடை: (புத்தகப்பயிற்சிகளும்)**

**1.** தமிழர்களின் வீரக்கலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக

* சிலம்பாட்டம்
* ஏறுதழுவுதல்

2. ஏறுதழுவுதல் என்றால் என்ன?

ஏறு என்பது, காளை மாட்டைக் குறிக்கும் ஏறு தழுவுதல் என்பது, காளையைத் தழுவி, அதன் வீரத்தை அடக்குவதாகும்.

3. சிலம்பாட்டம் - பெயர்க்காரணம் தருக.

சிலம்பு என்றால் ஒலித்தல் என்பதுபொருள் கம்பு சுழலும் போது ஏற்படும். ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் எனப் பெயரிட்டனர். கம்பு சுற்றுதல் என்னும் பெயரும் உண்டு.

4. வல்வில் ஓரியின் வில்லாற்றல். சிறப்பைக் கூறுக.

வல்வில் ஓரி வில்லாற்றலில் சிறந்து விளங்கியவர். ஒரு முறை அவர் எய்த அம்பானது யானை, புலி, கலைமான், பன்றி மற்றும் உடும்பின் மீது பாய்ந்து தன் சினம் தீர்த்தது என்று வன்பரணர் புறநானூற்றுப் பாடலில் பாடி மகிழ்ந்துள்ளார்

5. மற்போர் எவ்வாறு நடைபெறுகிறது?

(i) மல் என்பது , வலிமையைக் குறிக்கும். ஒருவன்தன் உடல் வலிமையால் செய்யும் போரே மற்போர்

(ii)இருவர் கைகோர்த்துக் கால்களாலும் தலையாலும் இடித்தும் உதைத்தும். ஒருவருடன் ஒருவர் போர் செய்வதே மற்போர் ஆகும்

## இலக்கணம்

(வினா - விடை) (இணைப்புச் சொற்கள்)

1. இணைப்புச் சொற்கள் எதற்குப் பயன்படுகின்றன?

நாம் தங்குதடையின்றி பேசவும், எழுதவும், இணைப்புச் சொற்கள் பயன்படுகின்றன.

* தொடர்களை இணைப்பதற்கு இணைப்புச் சொற்கள் பயன்படுகின்றன.

2. இணைப்புச் சொற்கள் சிலவற்றை எழுதுக

அதனால் , ஆகவே, மட்டும், ஆதலால். அல்லது, ஏனெனில், எனினும்.